**செ.வெ. எண்: 032** **நாள்: 09.01.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (9.1.2018) தலைமைச் செயலகத்தில், ராஜஸ்தான் மாநிலம், குவாலியர், டெக்கன்பூரில் 6.1.2018 அன்று நடைபெற்ற காவல்துறை இயக்குநர்கள் மற்றும் காவல்துறை தலைவர்கள் மாநாட்டில், இந்தியாவிலேயே மிகச் சிறந்த முதல் காவல்நிலையமாக கோவை மாநகரின் B2 RS புரம் காவல் நிலையமும், மிகச் சிறந்த ஐந்தாவது காவல்நிலையமாக சென்னை மாநகரின் K4 அண்ணா நகர் காவல் நிலையமும் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட மிகச் சிறந்த காவல் நிலையத்திற்கான கோப்பையை, கோவை மாநகர RS புரம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.டி.ஜோதி மற்றும் K4 அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சரவணன் ஆகியோர் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். இந்த நிகழ்வின்போது, காவல்துறை தலைமை இயக்குநர் திரு.டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) திரு.விஜயகுமார், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு. ஏ.கே.விசுவநாதன், இ.கா.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

கடந்த 2016–ஆம் ஆண்டு நடைபெற்ற காவல்துறை இயக்குநர்கள் மற்றும் காவல்துறை தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள காவல் நிலையங்களில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, குற்றங்கள் நடவாமல் தடுத்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் வழக்குகளில் தண்டனைப் பெற்றுத் தருதல் போன்ற முக்கிய காவல்துறைப் பணிகளில் முன்னேற்றத்தைக் கொண்டு வரவும், காவல் நிலையங்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தவும், நாட்டிலேயே மிகச் சிறப்பாக செயல்படும் 10 காவல் நிலையங்களை தேர்வு செய்து ஆண்டுதோறும் காவல்துறை இயக்குநர்கள் மற்றும் காவல்துறை தலைவர்கள் மாநாட்டின் போது சிறப்பிக்க வேண்டுமெனவும், சிறந்த காவல் நிலையங்களை கண்டறிய ராஜஸ்தான் மாநிலத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் மதிப்பீட்டு முறையை கடைபிடிக்க வேண்டுமென்றும் அறிவித்தார்கள்.

இதுதொடர்பாக மாநில அளவிலான குழு அமைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் இருந்து பெறப்பட்ட பரிந்துரைகளை பரிசீலித்து, மாநிலத்தில் சிறப்பாக செயல்படும் 10 காவல் நிலையங்களை தேர்வு செய்தது. இந்த மாநில அளவிலான குழுவினர் அளித்த பரிந்துரைகள் மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் கோவை மாநகரில் B2 RS புரம் காவல் நிலையம் மற்றும் சென்னை மாநகரில் K4 அண்ணா நகர் காவல் நிலையம் ஆகிய இரண்டு காவல் நிலையங்களை மாநிலத்தில் சிறந்த காவல் நிலையங்களாக தேர்ந்தெடுத்து தேசிய குழுவிற்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார்.

இதனையடுத்து, இந்திய தர நிர்ணயக்குழு மேற்படி இரண்டு காவல் நிலையங்களுக்கும் சென்று அக்காவல் நிலையங்களின் கட்டமைப்பு, தூய்மை, செயல்திறன் உட்பட 80 பல்வேறு விதமான காரணிகளின் அடிப்படையில் மதிப்பெண்களை அளித்து, தேசிய அளவில் 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் உள்ள 15,000–க்கும் மேற்பட்ட காவல்நிலையங்களிலிருந்து, மிகச் சிறந்த 10 காவல் நிலையங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த கோவை மாநகரிலுள்ள B2 RS புரம் காவல் நிலையம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த காவல் நிலையங்களில் முதல் காவல் நிலையமாகவும், சென்னை மாநகரில் K4 அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாவது காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டன.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 9.1.2018